நீதித்துறைப் படிவம் எண். 53 [விதி எண். 42–ஐ பார்க்க]

சாட்சியின் வாக்குமூலம்

**(குற்றவியல் நடைமுறைச்சட்டம் அத்தியாயம் XXII )**

நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண். 1, மேட்டூர்.

## CC. No. 330/2023

## P.W.2 –ன் வாக்குமூலம்

**(அரசுதரப்பு சாட்சி)**

.............

| | | |
|---|---|---|
| பெயர் | : | ஜெகநாதன் |
| தந்தை / கணவர் பெயர் | : | ராதாகிருஷ்ணன் |
| கிராமம் | : | மேட்டுர் |
| வட்டம் | : | மேட்டுர் |
| மாவட்டம் | : | சேலம் |
| சாட்சி வரிசை எண் | : | PW2 |
| வயது | : | 52 |

*1969–ஆம் வருடத்திய உறுதிமொழிச்சட்டம் (1969–ஆம் வருடத்திய 44–வது மத்திய சட்டம் )–ன் வகையங்களுக்கு உட்பட்டு சத்தியபிரமாணத்தின் உறுதி செய்யப்பட்டு இன்று **2026–ஆம் வருடம், மார்ச் மாதம், 03–ஆம் தேதி** பதிவு செய்யப்பட்டது.*

**எதிரி ஆஜரில் இல்லை. அவரது வழக்கறிஞர் ஆஜர்.**

**முதல் விசாரணை** (விசாரணை ஆரம்பிக்கப்பட்ட நேரம்:–12.15 PM

1. நான் தற்போது மேட்டுரில் குடியிருக்கிறேன். நான் மீன் வியாபாரம் செய்து வருகிறேன். எதிரிமற்றும் புகார்தாரர் இருவரையும் எனக்கு தெரியாது. அ.சாப.1 ஐ யார் அடித்தார்கள் என்ற விவரம் எனக்கு தெரியாது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை .

2. **சாட்சி அரசு தரப்பிற்கு ஆதரவாக சாட்சியம் அளிக்காத நிலையில், கற்றறிந்த அரசு தரப்பு வழக்கறிஞர் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கேட்டதன் பேரில் அனுமதி வழங்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.**

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை–**

1. சிவலிங்கம் என்னுடைய நண்பர் என்றால் இல்லை. நானும் புகார்தாரரும் தினமும் ஒன்றாக பிராந்தி குடிப்போம் என்றால் எனக்கு மது அருந்தும் பழக்கம் இல்லை. 22.07.2022 ம் தேதி 10.00 மணியளவில் நானும் சிவலிங்கமும் மதுபானம் வாங்கிக்கொண்டு மேட்டுர் RS கேட் அருகே வந்தபோது இந்த வழக்கின் எதிரி எங்களிடம் இருந்த பிராந்தி பாட்டிலையும், பணத்தையும் கேட்டார் என்றால் இல்லை.
2. எதிரி அதனால் அ.சா.1 ன் கண்ணத்தில் ஓங்கி அடித்து சட்டை பாக்கெட்டில் இருந்த ரூ.550/– எடுத்துக்கொண்டார் என்றால் இல்லை. எதிரி அ.சா.1 ன் பாக்கெட்டில் இருந்து பணத்தை கொல்லையடித்து சென்றபோது நானும் அவருடன் இருந்தேன் என்றால் சரியல்ல.
3. எதிரி என்னுடைய நண்பர் என்பதால் அவருக்காக பரிந்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை–** இல்லை.

**மறுவிசாரணை இல்லை. விசாரணை முடிக்கப்பட்டது.**

விசாரணை முடிக்கப்பட்ட நேரம்:– 12.20 PM

**மேற்படி சாட்சியம் என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் விசாரணை செய்யப்பட்டு, பதிவு செய்யப்பட்ட சாட்சியம் சாட்சிக்கு எடுத்துக்காட்டி அவர் சரி என ஒப்புக்கொண்டு திறந்த நீதிமன்றத்தில் கையொப்பம் செய்தார்.**

**ஒம்/–நா.கோபாலகிருஷ்ணன்**
**நீதித்துறை நடுவர் எண்.1,மேட்டூர்.**